

# சிகாம்புட்டில் அந்நிய நாட்டவர்களின் வியாபாரப் பொருட்கள் பறிமுதல்

கோலாலம்பூர், செப். 10-

கடந்த சனிக்கிழமை சிகாம்புட்டில் சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட கோலாலம்பூர் மாநகர் மன்றம் இரண்டு அந்நிய நாட்டவர்கள் வியாபாரம் செய்து கொண்டிருந்த பொருட்களைப் பறிமுதல் செய்தது.

அதேவேளையில் ஜாலான் ஸ்ரீபிந்தாங், ஜாலான் பிந்தாசான் சிகாம்புட் சாலைப் பகுதிகளில் வியாபாரம் செய்த வந்த அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பட்டது. கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்கப் பிரிவும் சிகாம்புட் கிளை அலுவலகமும் இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டதாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் அது கூறியது. இச் சோதனையின்போது லைசென்ஸ் இன்றி வியாபாரம் செய்து வந்த இரண்டு அந்நிய நாட்டு ஆடவர்களின் பொருட்களை 2016ஆம் ஆண்டு கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அங்காடி வியாபார லைசென்ஸ் பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்டதாக அந்த அறிக்கை கூறியது.

அதேவேளையில் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் வகையில் வியாபாரம் செய்து வந்த இரண்டு கடைகளுக்கு எதிராக 1974ஆம் ஆண்டு கட்டட, கால்வாய், சாலைத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அது கூறியது.

பறிமுதல் செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களும் செராஸ், தாமான் மிகர்ஜாவில் உள்ள கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது.